1968 பிப்ரவரி 14]

பன்றி வளர்ப்பு அலுவலகக் கட்டடம்

* 21 வினா—திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அலமாதியில், பன்றி வளர்ப்பு அதிகாரியின் அலுவலகத்துக்கும் பணியாளர்களுக்கான உறைவிடங்களுக்கும் எப்போது கட்டடங்கள் கட்டப்பட்டன ?

(இ) அவை எப்போது முறைப்படி திறக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) பன்றி வளர்ப்பு அலுவலரின் அலுவலகக் கட்டடமும் பணியாளர்களுக்கான உறைவிடங்களும் அலமாதியில் 31—3—1966 அன்று கட்டி முடிக்கப் பட்டன. பின்னர் 12—4—1966 அன்று கால்நடை வளர்ப்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன.

(இ) அக்கட்டிடங்கள் 25—3—1967 அன்று முறைப்படித் திறந்து வைக்கப்பட்டன.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, அந்த பன்றி வளர்ப்பின் மூலம் அரசுக்கு வருகின்ற வருமானம் என்ன ? லாபத்தில் நடக்கின்றதா அல்லது நஷ்டத்தில் நடக்கின்றதா என்பதை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது பற்றிய கேள்வி. பன்றி வளர்ப்பிலே எனக்கு தெரிந்தவரை லாபமேயொழிய நஷ்டம் இல்லை.

THIRU K. VINAYAKAM : May I know why there was such an inordinate delay, why there was so much time between the date of its occupation and the date of its construction, who interferred in the meantime and prevented occupation of the premises at the earliest possible moment?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. நாங்கள் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால் கட்டப்பட்ட கட்டடம். நாங்கள் பொறுப்பிற்கு வந்தபிறகு திறந்து வைத்தோம்.

Admission to Engineering courses, etc.

*24 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether any relaxation of the rules of admission to Engineering and other technical courses, has been permitted by the Government for the academic year 1966-67; and

(b) if so, whether the list of persons for whom such relaxation was done, along with the reasons therefor will be placed on the Table of the House?